**வரையறுத்த சீபாங்க் கொலிடே கோம்ஸ் (தனியார்) கம்பனி - 2024**

------------------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

வரையறுத்த சீபாங்க் கொலிடே கோம்ஸ் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கை தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**விடயங்களை விலயுறுத்தல்**

நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 2.6 இற்கு எனது கவனத்தை ஈர்க்கின்றேன். கம்பனியின் தொடர்ந்து செல்லும் இயலுமைமையை தொடருவதற்கு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய குறிப்பிடத்தக்க நிட்சயமற்றதன்மையை குறிக்கின்றது. எவ்வாறாயினும், கம்பனிக்கு ஏதாவது நிதி உதிவி தேவைப்படினட இறுதி தாய்கம்பனிக்கு நிதி உதவி வழங்குவதற்கு உடன்பட்டிருந்தனர். ஆகவே, நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.. இந்த விடயம் எனது அபிப்பிராயத்தை மாற்றியிருக்கவில்லை.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும்

முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 10.46 மில்லியன் தொகையான இலாபமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 3.35 மில்லியன் தொகையாகும். ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 7.11 மில்லியன் தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. 15.43 சதவீதத்தால் உணவு விடுதி அதிகரித்தமை மீளாயவாண்டின் போதான இலாப அதிகரிப்பிற்காக பிரதான காரணமாக இருந்தது.

**2.2 விகிதப் பகுப்பாய்வு**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான கம்பனியின் சில முக்கிய வீதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரங்கள்** | **ஆண்டுகள்** | |
|---|---|---|
| | **2024** | **2023** |
| **இலாபத்தன்மை வீதம்** | | |
| மொத்த இலாப வீதம் (சதவீதம்) | 48 | 46 |
| தேறிய இலாப வீதம் (சதவீதம்) | 5 | 2 |
| மொத்த சொத்து மீதான வருவாய் | 0.36 | 0.14 |
| உரிமை மூலதனம் மீதான வருவாய் | (0.19) | (0.05) |
| **திரவத்ன்மை விகிம் (தடவைகளின் எண்ணிக்கை)** | | |
| நடைமுறை விகிதம் (தடவைகளன் எண்ணிக்கை) | 0.43 | 0.29 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளன் எண்ணிக்கை) | 0.36 | 0.20 |

கம்பனியானது எதிர்மறையான நிறுத்தி இலாப நிலைமையின் விளைவால் மீளாய்வாண்டின் போது எதிர்மறையாக மூலதன வருவாய் வீதத்தை பதிவுசெய்திரந்தது. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மெதுவான முன்னேற்ற எல்லையில் இருப்பினும் கம்பனி போதுமான திரவ விகிதம் பேணப்பட்டு வருகின்றது. இது தொழிற்படு மூலதன கட்டுப்பாடுகளிற்கு வழவகுக்கும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு திறமையீனங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| **(i) முறையான அறைகள் முன்பதிவு முறைமை இன்மை**<br>விடுதியின் முன்பதிவு முறைமை தற்போது மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு பொறிமுறை இல்லாமையால் சீபாங் விடுதி முகாமையாளர்கள் முன்பதிவு முறைகளை திறனுடைன் கண்காணிப்பதை தடுக்கின்றது. தற்போது உரிய நிலைய முகாமையாளர்களிற்கு நலன்புரி பிரிவால் நாளாந்தம் ஈமெயில்கள் அனுப்பபடுகின்றன. எவ்வாறாயினும் அந்த அறிக்கைகள் பெரும்பாலும் பூர்த்தியாக்கப்படாமல் வாடிக்கையாளர் பெயர் போன்ற அத்தியாவசிய விபரங்கள் இல்லாமல் இருந்தது. இதன் விளைவாலல் முனாமையாளர்களால் முன்பதிவுகளை உள்ளபடியாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. இந்த நிலமை செயற்பாட்டு திறமையீனங்களிற்கு வழிவகுத்தமையால் உணவக உத்தியோகத்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்களிற்கு இடையீறுகளை விளைவித்தது. அத்தகைய நிகழ்வுகளிற்கான | தற்போது BOC நலன்புரி பிரிவு முன் பதிவுகளிற்கு மிகவும் பழமைவாய்ந்த முறைமையை பின்பற்றுகின்றது. இதே போல தவறுகள் மற்றும் விடுபாடுகளை கண்டறிந்து BOC IT பிரிவின் ஆதரவுடன் BOC நலன்புரி பிரிவு மேற்குறிப்பிட்டவற்றினை பொல தவறுகளை தவிர்ப்பதற்கு முன்கூட்டிய முறைமையை உருவாக்கியுள்ளது. இந்த புதிய முறைமை இந்த ஆண்டு இறுதிக்கு முன்னர் தொடங்கப்படும். | கம்பனிக்காக முறையான ஒதுக்கீட்டு முறைமை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

உதாரணம் பின்வருமாறுள்ளன.

| அமைவிடம் | திகதி | அறை இலக்கம் | விருந்தியர் பெயர் | விபரம் |
|---|---|---|---|---|
| சீபாங் ஓய்வு விடுதி அநுராதபுரம் | 08.08.2025 | இல. 105 | பிஎவ்:177370 P.D.P. பிசன்ன PF:17837- A அபயக்கோன் | இரட்டை ஒதுக்கல் |
| | 10.07.2025 | இல. 105 | பிஎவ்:052851 –H.M.R. ரத்னாயக்கெ பிஎவ்:204040 -M.M.N.P மனதுங்க | இரட்டை ஒதுக்கல் |

**(ii) அநுராதபுரம் ஓய்வு விடுதயின் செயற்பாட்டு திறமையீனங்கள்**

அ. **CCTV முறைமை செயற்பாடின்மை**

விடுதியினுடைய CCTV கண்காணிப்பு முறைமை தற்போது செயற்பாடாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. வளவில் 1 கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தாலும் சகல மக்கயமான பகுதிகளும் முழுமையாக பாதுகாப்பதற்கு போதுமானதாக இருக்கவில்லை. மேலும் தற்பொதுள்ள முறைமை செயற்பாட்டில் இருக்கவில்லை. அநுராதபுரம் சீபாங் ஓய்வு விடுதி முகாமையாளர் 2024 திசெம்பர் 23 ஆந் திகதிய கடிதம் மூலம் சீபாங் விடுதியின் விடுமுறை இல்லங்களின் இந்த பிரச்சனையை தலைமை அலுவலகத்திற்கு முறையாக தெரிவித்தள்ளார். எவ்வாறாயினும் முறைமை மீட்டெடுப்பு அல்லது தரமுயர்த்தல் தேவையான திருத்த நடவடிக்கை இன்னமும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமை கோட்டலை சாத்தியமாக பாதுகாப்பு ஆபத்துக்களிற்கு உள்ளாக்குகின்றதுடன் நிகழ்வகளை வினைத்திறனுடன் மீளாய்வு செய்ய அல்லது விசாரணை செய்வதற்கு முகாமைத்தவத்தின் திறனைக் கட்டுப்படுத்துகின்றது.

மூலதன முதலீடு மற்றும் இந்த தன்மையின் திருத்தங்கள் BOC இன் பொறியியலாளர் ஆலோசனையுடன் இலங்கை வங்க ஆதார சேவைப் பிரிவால் செய்யப்பட்டன. 2024 திசெம்பர் 24 இல் வதிவிட முகாமையாளரால் செய்யப்பட்ட வேண்டுகை பிரகாரம் நாங்கள் இந்த விடயத்தை திருத்தவதற்கு 2025 பெப்ரவரி 22 இல் BOC இன் DGM ஆதார சேவைக்கு வேண்டுகை செய்திருந்தோம். இறுதியான நாளது வரையாக்கலின் பிரகாரம் அவர்கள் விடயத்தை கவனத்திற் கொண்டிருந்தனர்

CCTV கண்காணிப்பு முறைமையை மேலும் தாமதமில்லிமால் மீட்டெடுக்க அல்லது தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆ **புதுப்பிக்கப்பட்டட குத்தகை உடன்படிக்கை இன்மை**

இலங்கை அரசாங்கத்தடன் கைச்சாத்திட்ட அநுராதபுரம் விடுதிக்கான இருக்கின்ற குத்தகை உடன்படிக்கை 2022 யூன் 20 இல் காலாவதியாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இன்றுவரை குத்தகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆதனத்தின் மீதான தகுதியுடைய குத்தகையாதன உரிமையின்னை வரையறுத்த சீபாங் கொலிடே கோம்ஸ் (பிரைவேற்) மற்றும் இலங்கை வங்கி 2025 ஆகஸ்ட் 24 இல் புதிய முகாமைத்துவ உடன்படிக்கையை

கருத்துரைகளுடன் உடன்படுகின்றோம் மேற்குறிப்பிட்ட குத்தகை உட்படிக்கை நிறைவேற்றல் செயற்பாட்டில் உள்ளன. வங்கியானது சகல அவணங்களையும் பூர்த்தியாக்கியிருந்ததுடன் 2025 நிதியாண்டு வரையும் உரிய வரியை செலுத்தியருந்ததுடன் அநுராதபுர மாகாண ஆணையாளர்

உரிய ஆதன உடமையாளர்களுடன் தகுதியான குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| கைச்சாத்திட்டிருந்தது. சட்டரீதியாக தகுதியுடைய குத்தகை உடன்படிக்கை இல்லாமல் செயற்படுத்தவதற்கு ஆதனங்கள் தொடருவதை குறிக்கின்றது. நுவரெலியாவிலுள்ள சீபாங்க் விடுதி ஆதனத்துடனும் இதேபோன்ற பிச்சனை காணப்பட்டது. அங்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் குத்தகை உடன்படிக்கையை புதுப்பிப்தற்கு தவறியிருந்தது. | திணைக்களம் ஊடாக கொழும்பு காணி ஆணையாளர்களிற்கு அந்த ஆவணத் தொகுதியை சமர்ப்பித்திருந்தது. வங்கி உத்தியொகத்தர்கள் காணி ஆணையாளருடன் பின்தொடர் நடவடிக்கை எடுக்கின்றதுடன் அவற்றின் பிரகாரம் வரைவு உடன்படிக்கை தயாரித்தல் இறுதி கட்டத்தில் உள்ளது. | |

இ **நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்தப் பதிவேடின்மை.**

| | | |
|---|---|---|
| அந்த சகல சொத்துக்களும் வங்கிக்கு சொந்தமாக உள்ளமையால் வங்கியால் சீபாங்க் விடுதியின் பொருளிருப்புகள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் வங்கியானது கம்பனிய்காக நாளது வரயாக்கப்பட்ட நிலையான சொத்தப் பதிவேணட பேணியிருக்கவில்லை. அநுராதபுரம் சீபாங்க் விடுதி வருடாந்த சொத்த மெய்மையாய்வு செய்யப்பட:ட வங்கிக்கு விளைவுகளை அறிவித்திருந்த பொதிலும் வங்கியால் சொத்து பதிவேட்டிற்கு அவசியமான நாளதுவரையாகல்களை செய்திரக்கவில்லை. ஆகவே, சொத்தப் பதிவேடு மற்றும் பௌதீக ரீதியாக கிடைத்த சோத்தக்களிற்கும் இடையில் பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.<br><br>- நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்பட்ட ரூபா 2,601,760 பெறுமதியான சொத்துக்கள் அநுராதபுரம் சீ பாங்க் விடுதியில் உள்ளபடியாக பெறப்பட்டிருக்கவில்லை.<br><br>- ரூபா 2,582,658.65 கிரயத்தில் பதியப்பட்ட சொத்தக்கள் ஏலத்திற்கு விடப்பட்டிருந்த போதிலும் அவை நிலையான சொத்தப் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.<br><br>- ரூபா 1,137,588.99 கிரயத்தில் பதியப்பட்ட சேதமடைந்த இருப்புக்கள் நிலையான சொத்துப் பதிவேட்டிலிருந்து அகற்றக்கட்டிருக்கவில்லை. | மேற்குறிப்பிட்ட ரூபா 2,796,472 - நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட சொத்து தொடர்பானது. ஆனால் விடுதியில் இருக்கவில்லை.<br><br>மேற்குறிப்பிட்ட ரூபா 2,582,658.65 கிரயத்திலான சொத்துக்கள் ஏலத்திற்கு விடப்பட்டிருந்ததுடன் BOC ஆல் சொத்தப் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. தற்போதுள்ள நடைமுறைப்படி வங்கி விடுதி பொருளிருப்புகள் வங்கியால் பேணப்படுகின்றது. வங்கிக்கு சொந்தமான சகல சொத்துக்களும் கம்பனி வருடாநடத மெயமையாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது. இதன்படி முறைமையில் நாளது வரையாக்கப்பட்ட பதிவுகளிற்கு BOC இற்கு அறிவித்திருந்தது. அத்தகைய ஏல விற்பனை உத்தியோகத்தர்களால் விடுதி முகாமையாளரின் ஒத்துழைப்புடன் அத்தகைய ஏல விற்பனை விபரங்களை வருடாந்த மெய்மையாய்வு அறிக்கையிலிருந்து நீக்குவதற்கு முகாமைத்துவ பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | சொத்துப்பதிவேடுகளில் உண்மை தன்மை மற்றும் உள்ள தன்மையை உறுதிப் படுத்துவதற்கு வருடாநத மெய்மையாய்வு அறிக்கை அடிப்படையில் நிலையான சொத்துப் பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கு இலங்கை வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது சகல வித்தியாசங்களையும் இனங்கண்டு திருத்துவதற்கு சீபாங் கொலிடே கோம்ஸ்க்கும் வங்கிக்கும் இடையில் இணைந்த இணக்க நடைமுறை நடாத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்குறிப்பிட்ட ரூபா 1,137,588.99 தொகையான கிரயம் மொத்த பழுதடைந்த வியங்களாக உள்ளதுடன் எதிர்காலத்தில் ஏலத்திற்கு விட வேண்டியிருக்ககும். அத்தகைய ஏல விற்பளைக்கு இருக்கின்ற விதிமுறைகள் வங்கி உத்தியோகத்தர்களால் பின்பற்றப்பட்டன. வழமை போல ஏல விற்பனைகள் அத்தகைய விடயங்களின் கருத்திற் கொள்ளக் கூடிய தொகையை சேகரித்த பின்னர் செய்யப்படுவதுடன வங்கியின் ஏல விற்பனைகளின் கிடைத்த வழிகாட்டலின் பிரகாரம் நாங்கள் வங்கியிலிருந்து 2026 இல் 1 ஆவது காலாண்டில் ஏலத்திற்கு விடுவதற்கு வேண்டப்பட்டது. | |
| ஈ. | விடுதியின் இருக்கின்ற குளிரூட்டல் இயந்திரம் 2014 இலிருந்து பாவணையில் இருந்ததுடன் தற்பொது பழுதடைந்து திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு கிரயங்கள் உயர்வாக இருந்தமையால் பயனற்றிருந்தது. எவ்வாறாயினும் செயற்பாட்டு கிரயத்தை குறைப்பதற்கும் விருந்தினர்களிற்கு திருப்திகரமான சேவை வழங்கப்படுவதை உறுதிப்படுத்தவதற்கும் புதிய ஒன்றுடன் இருக்கின்ற இயந்திரத்தை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகளுடன் உடன்படுகின்றோம். விடுதி முகாமையாளரின் தொடர்ச்சியான வேண்டுகையுடன் நாங்கள் வங்கி மற்றும் BOC பொறியியலாளரகளிற்கு வேண்டுகை செய்திருந்தோம். அவர்கள் புதிய குளிரூட்டியை கொள்வனவு செய்து அநுராதபுர் விடுதிக்கு வழங்குவதற்கு கொள்வனவு நடைமுறையில் ஈடுபட்டள்ளனர். | விருத்தினர்களிற்கு சிறந்த வேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| உ | **தானியங்கி தீ கண்டறிதல் முறைமை செயற்படாமை**<br>அநுராதபுர் சீபாங் ஓய்வு விடுதியில் தானியங்கி தீ கண்டறிதல் முறைமை கடந்த இரண்டு முதல் மூன்று அண்டுகளாக செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2023 சனவரி 30 இல் ரூபா 907,000 செலவில் பகுதியளவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்த முறைமை இன்னமும் முழுமையாக செயற்படுத்தம் நிலைக்கு கொண்டுவருவதற்கு எவ்வித வினைத்திறனான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த முக்கியமான பாதுகாப்பு | கருத்துரைகளுடன் உடன்படுகின்றோம் நாங்கள் BOC ஆதார சேவை பிரிவுக்கு இந்த விடயத்தை திருப்பவும் அறிவிப்பதற்கு முயற்சிகள் எடுப்பதுடன் விடயத்தை தருத்துவதற்கு அவர்களுடைய பொறுப்புக்களை தொடர்ச்சியாக | தீ பாதுகாப்பு விதி முறைகளுடன் இணங்குதலை உறுதி செய்வதற்கும் சகல குடியிருப்பாளர்களின் நல்வாழ்வை பாதுகாப்பதற்கும் தானியங்கி தீயணைப்பு முறைமையை முழுமையாக திருத்தம் செய்வதற்கு அல்லது |

| | | | |
|---|---|---|---|
| | பொறிமுறையின் தொடர்ச்சியாக செயற்பாடற்ற நிலை ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் சொத்துக்களிற்கு குறிப்பிடத்தக்களவு ஆபத்தினை ஏற்படுத்தகின்றது எனவும் கட்டாய தீ பாதுகாப்பு விதி முறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளிற்கு இணங்காமையை குறிக்கின்றது என அவதானிக்கப்பட்டது. | பின்பற்றுவோம். தீயணைப்பு உபகரணங்களின் செயன்முறை செயற்பாட்டு நிபந்தனைகளில் இருந்தன. | மீளமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |
| ஊ | **அநுராதபுரம் சீபாங் ஓய்வு விடுதியில் போதுமான உணவக இடவசதியின்மை**<br><br>அநுராதபுரம் சீபாங் ஓய்வு விடுதியில் இருக்கின்ற உணவக இடம் பழைய கட்டிடத்தில் செயற்பாடுகளிற்காக முன்னர் போதுமானதாக இருந்தது. ஆனால், கோபுர வடிவில் கட்டப்பட்ட பின்னர் கோபுர கட்டிடத்திற்கு தனி உணவகம் இல்லாததால் தற்போது போதாமல் இருந்தது. உணவத்தில் இருக்கும் விருநதினர்களைப் போலவே கணிசமான எண்ணிக்கையான வெளிப்புற வாடிகக்கையாளர்களிற்கு உணவகத்திற்கு உணவருந்த வருகின்றனர். இது இடப்பற்றாக்குறையை மேலும் அதிகரிக்கின்றது. தற்போது வரையறுக்கப்பட்ட வினைத்திறனான சேவை செயற்திறன் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி எதிர்மறையாக பாதிக்கக்கூடும் என அவதானிக்கப்பட்டது. | இறுதியான புதுப்பித்தலின் போது இந்த விடயம் கருத்திற் கொள்ளப் பட்டிருந்ததுடன் BOC பொறியியலாளர்களின் கருத்துப்படி அத்தகைய கட்டமைப்புகள் சாத்தியமற்றிருந்தது. எப்படியிருப்பினும், 2021 இல் உணவகத்தின் புதுப்பித்தல் காலத்தின் போது நடை பாதையால் விரிவடைந்து வருகின்றது. நாங்கள் BOC ஆதர சேவை பிரிவு உடன் மீண்டும். பேச்சு வார்த்தை நடாத்துவோம். | கம்பனி வாடிக்கையாளர்களின் திருப்திக்காக அத்தியாவசிய வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| எ | **சிறிய கோபுர வடிவ கட்டிடத்தின் நலிவான பரிமரிப்பு**<br><br>2011 இல் சத்துரா கட்டிட கலைஞர்களால் நிர்மாணிக்கப்பட்ட கோபுரக் கட்டிடம் நிர்மாண நிலைமைகள் அழிவடைந்தமையால் அவசர பாரமரிப்ப வேண்டப்பட்டது என அவதானிக்கப்பட்டது. சகல குளியலறை பொருத்திகளும் சந்தையில் கிடைக்காத ‘‘பராவிட்’’ மாதிரியாக இருந்ததுடன் 024 யூலை 24 ஆந் திகதிய கடிதம் மூலம் தலைமை அலுவலகத்திற்கு இந்த விடயம் முகாமையாளருடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு தேவையான மீளமைப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த பொருத்திகள் குறிபபிடத்தக்களவு கிரயத்தை ஏற்படுத்தி அத்தியாவசிய மீளமைப்பு கட்டத்தை அடைந்திருந்தது. கோட்டல் அறைகள் சுத்தமாகவும் ஒழுங்காகவும் பராமரிக்கப்பட்டிருந்த போதிலும் அண்மைணில் வர்ணம் பூசப்பட்டதால் கட்டிடத்தின் ஒட்டுமொத்த தோற்றம் கம்பனியினுடைய செயற்பாடுகளை மோசமாக பாதித்திருந்தது. மேலும், மூன்றாவது மற்றும் நான்காவது மாடிகளில் பொருத்தப்பட்ட தற்காலிக மழைத் தடுப்பு கவர் காலப் போக்கில் கட்டிடத்தின் நலிவான கவர்ச்சிகளை மேலும் மோசமாக்கியுள்ளன. | நாங்கள் 2025 யூலை 28 இல் BOC ஆதார சேவைக்கு மேற்குறிப்பிட்ட வேண்டுகையை கவனத்தில் கொண்டிருந்தோம். எங்களிற்கு 2025 யூலை 28 இல் வதிவிட முகாமையாளர் அறிவித்திருந்ததுடன் அவர்கள் தீர்வினை காணும் செயற்பாட்டில் இருந்தனர். | கம்பனி வாடிக்கையாளர்களின் திருப்திக்காக அத்தியாவசிய வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(iii)** | **யாழ்ப்பாணம் - சீபாங் ஓய்வு விடுதியின் செயற்பாட்டு திறமையீனங்கள்** | | |
| அ | ஓய்வு விடுதிக்கான அனுபவமற்ற முகாமையாளர்.<br><br>யாழ்ப்பாணம் சீபாங் ஓய்வு விடுதியின் தற்போதைய முகாமையாளர் கோட்டல் அல்லது உபசரிப்பு தொழிலில் முன்னனுபவம் இன்மை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால் முகாமையார் விடுதி செயற்பாடுகளின் அறிவு விரையறையாக இருந்தமை உத்தியோகத்தரின் வினைத்திறனான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடுகளில் இயலுமையை பாதிக்கின்றது. முகாம்முவ அனுபவத்திலுள்ள இந்த இடைவெளி விடுதியின் செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் சேவைத்தரம் மீது கணிசமானளவு தாக்கதிற்கு உள்ளாகியிருந்தது. | உடன்படுகின்நேறாம் செலவின முகாமையாளரின் கீழ் புகையிரதத்தை பெறுவதற்கு சில ஏனைய BOC ஓய்வு விடுதிக்கு மேற்குறிப்பிட்ட முகாமையாளரை மாற்றம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. இந்த இடமாற்றம் 2025.10.27 இலிருந்து செயற்பாட்டிற்கு வரவுள்ளது. | செயற்பாட்டு மேற்பார்வை மற்றும் சேவை வழங்கலை வலுப்படுத்த உணவு விடுதி முகாமையாளர், உணவக செயற்பாடுகள மற்றும் வாடிக்கையாளர் சேவை தரநிலைகள் முகாமையாளருக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படுவதற்கு பரிந்துரைத்துள்ளது. |
| ஆ | யாழ்ப்பாணம் ஓய்வு விடுதில் கழிவகற்றல் முறைமை போதாமை.<br>யாழ்ப்பாணம் ஓய்வு விடுதி போதிய கழிவகற்றல் முறைமை இல்லாமல் திறக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. கழிவுநீரின் முறையற்ற அகற்றல் வளவிற்குள் நீர் தேங்குதல், நுளம்பு பெருக்கம் மற்றும் தொடர்புடைய சுகாதார பிரச்சனைகள் உருவாவதில் விளைந்நது. இந்த நிலைமை வளவின் தூய்மை, பாதுகாப்பு மற்றும் ஒட்டு மொத்த கவர்ச்சியினை எதிர்மறையாக பாதிப்புக்கு உள்ளாகும். | தற்போது நாங்கள் கழிவு சுத்திகரிப்பு சுழற்சி இயந்திரத்தில் குறைபாடுகள் இனங் காணப்பட்டதுடன் இயந்திரம் முறையாக வேலை செய்யவில்லை என அவதானிக்கப்பட்டது. நாங்கள் வரையறுத்த டைரகி அக்சிஸ் என்வயமன்ட் (பிவீரீ) ஆன சேவை வழங்குநரை தொடர்பு கொண்டிருந்ததுடன் அவர்கள் 2025.10.21 இல் பொறியினை பரிசோதித்திருந்ததுடன் அவர்களுடைய அறிவுறுத்தலை வழங்கியிருந்தனர். | முறையான கழிவகற்றல் முறைமையை அமுலாக்கவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு மற்றும் 2021 அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பிரிவு என்பவற்றிற்கமைய வரைவு AR மற்றும் கணக்குகள் நிதியாண்டு ஆடிவடைந்து அறுபது நாட்களிற்குள் கணக்காய்வார் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிதக் கணக்காய்வு ஏனஸ்ட் அன்ட் ஜங்கஸ்சால் செய்யப் பட்டிருந்துதுடன் அவர்கள் கணக்காய்வை இறுதியாக்குவதற்கு கருத்திற் கொள்ளக்கூடிய காலத்தை எடுத்திருந்தனர். மேலும் வர ஆலோசனை KPMG ஆல் செய்யப்பட்டிருந்ததுடன் அதேபோல வரிக் கணிப்பீட்டிற்காக கருத்திற்கொள்ளக்கூடிய | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் செயற்பாட்டு கைநூல் என்பவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

எவ்வாறாயினும் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 4 மாதங்கள் தாமதத்துடன் 2025 யூன் 26 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

காலத்தை எடுத்திருந்தனர். கருத்திற்கொள்ளக்கூடிய காலத்தை எடுத்திருந்தனர். அடுத்த ஆண்டிலிருந்து நாங்கள் எங்களுடைய சிறந்த காண்காய்வின் இறுதியாக்கல்களை செய்வதற்கு முயற்சிப்போம்.